| உறுதிமொழி # 13: உள்ளக சேவை விநியோகத்தை மேம்படுத்துவதற்கு குடிமக்கள் பங்குபற்றலுடன் பிரதேச சபைகளில் குழு முறைமையை வலுப்படுத்தல். | |
|---|---|
| 1 ஒக்டோபர் 2018 – 30 செப்ரம்பர் 2020 | |
| முன்னணி நடைமுறைப்படுத்தல் நிறுவனம்/செயற்பாட்டாளர் | மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு |
| **உறுதிமொழி விளக்கம்** | |
| உறுதிமொழி அடையாளப்படுத்தப் போகும் பொதுப் பிரச்சினை என்ன? | நாட்டின் உள்ளூராட்சி அரசாங்க முறைமையில் பிரதேச சபைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. அத்துடன், பல்வேறு உள்ளூர் சேவைகளை வழங்குவதில் பொறுப்புடையதாக இருக்கின்றன. 1987ம் ஆண்டு 15ம் இலக்க பிரதேச சபை சட்டமானது, சபை குழுக்களுக்கான உருவாக்கத்தை வழங்குகின்றன. அத்துடன், தீர்மானம் எடுத்தல் செயற்பாடுகளில் குடிமக்களின் பங்குபற்றலை ஏதுவாக்குகின்றன.தற்போது இந்த பிரிவு இரு சபைகளாலும், குடிமக்களாலும் முறையாக பயன்படுத்தப்படவில்லை. பெரும்பாலான குடிமக்கள் தீர்மானம் எடுத்தல் செயற்பாட்டில் இருந்து விலக்கப்பட்டவதாக கருதுகின்றனர். அத்துடன், தாம் பெறும் சேவைகளில் அதிருப்தி அடைந்துள்ளனர். தமது பகுதியில் ஏற்படும் விடயங்களை அடையாளங் காண்பதற்கு மற்றும் பிரதேச சபைகளின் அடிப்படைச் செயற்பாடுகளை வசதியளிப்பதற்கு பிரதானமான துணை சட்டங்கள் போதியதாக இல்லை. |
| உறுதிமொழி என்ன? | சிறந்த கொள்கைகள் மற்றும் மேம்பட்ட உள்ளக சேவை வழங்கலை பரிந்து பேசுவதற்கு பிரதேச சபைகளுடன் ஈடுபடுவதற்கு குடிமக்களின் ஆற்றலை பரவலாக்குவதற்கு இந்த உறுதிமொழி இலக்கு வைத்துள்ளது. இலங்கையில் பெரும்பாலான மக்கள் பிரதேச சபை பகுதிகளில் வசிக்கின்றனர். குடிமக்கள் பங்குபற்றலுடன் இந்த சபைகளில் சமுதாய கட்டமைப்புக்களை வலுப்படுத்துவதற்கான உறுதியான தேவை உள்ளது. குழுக்களில் பங்குபற்றலானது கட்டமைக்கப்பட்ட மற்றும் சபைகளுக்கும், குடிமக்களுக்கும் இடையிலான தொடரும் உரையாடலை உருவாக்குவதற்கு உதவும். தமது சமுதாயத் தேவைகளை சிறந்த கவனத்திற்கு கொண்டு வருவதற்கும், வரவு செலவுத் திட்ட தயாரிப்புகள் மற்றும் செயற்றிட்ட அபிவிருத்தியில் ஈடுபடுவதற்கும் அத்தகைய சூழல் மிகவும் பயனுள்ளதாகும்.சபையின் நிர்வாக விடயங்களை கலந்துரையாடுவதற்கான சந்தர்ப்பங்களை குழுக் கூட்டங்கள் வழங்குகின்றன. அதன் மூலம், சபையின் வினைத்திறன் மற்றும் தேர்ச்சியை அதிகரிக்கின்றன. |
| பொது பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உறுதிமொழியானது எவ்வாறு பங்களிக்கும்? | மேல் மாகாணத்தின் 3 மாவட்டங்களில் மூன்று பிரதேச சபைகள் குடிமக்கள் பங்கேற்புடன் குழுக்கள் உருவாக்குவதற்கான பரீட்சார்த்த சபைகளாக தெரிவு செய்யப்படும்.விழிப்புணர்வு உருவாக்கம், தொழிநுட்ப ஆதரவு மற்றும் திறன்கள் என்பன குழுக்களின் வினைத்திறன் மிக்கச் செயற்பாட்டிற்கு வழங்கப்படும். தேவையான ஆகக் கூடியது 5 துணைச் சட்டங்கள் பங்கேற்பு முறையின் ஊடாக அடையாளங் காணப்பட்டு, உருவாக்கப்படும். மேல் மாகாணத்தில், மாகாண சபை மட்டத்தில் 'பிரஜாமண்டல' வலுப்படுத்தலுக்கான நியதிச் சட்டம் உருவாக்கப்படும். பிரதேச சபை, நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளில் அனுபவத்தை ஆதரவளிப்பதற்கு மற்றும் பிரதிபலிப்பதற்கு பொறியமைப்பு ஒன்று வழங்கப்படும். அத்துடன், பிரதேச சபைகளில் குடிமக்கள் பங்குபற்றலுடன் குழு முறைமையை வலுப்படுத்துவதற்கான மற்றும் நகர சபைகள் மற்றும் மாநகர சபைகளுக்கு வெற்றிகரமாக கொண்டு செல்வதற்கான உறுதியான தேவை உள்ளது. |
| OGP விழுமியங்களுக்கு ஏன் இந்த உறுதிமொழி சம்பந்தப்படுகின்றது? | சபையின் தீர்மானம் எடுத்தல் செயற்பாட்டில் குடிமக்கள் தொடர்ச்சியான அடிப்படையில் ஈடுபடுவதால் **பொது பங்குபற்றலை** இந்த உறுதிமொழி முன்னிறுத்துகின்றது.சபையின் செயற்பாடுகள், செலவு விடயங்கள், வருமான சேகரிப்பு போன்றன குறித்து அறிவு குடிமக்களுக்கு வழங்கப்படுவதால் **வெளிப்படைத் தன்மையையும்** அது முன்னிறுத்துகின்றது. |
| மேலதிக தகவல்: | 1987ம் ஆண்டு 15ம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் நடைமுறைப்படுத்தலை இந்த உறுதிமொழி வலுப்படுத்துகின்றது. நாட்டின் தகவல் அறியும் உரிமைச் சட்டத்தினாலும் அதற்கு ஆதரவளிக்கப்படுகின்றது. |

| சரிபார்க்கக் கூடிய வழங்கக்கூடியவையுடன் மைற்கல் நடவடிக்கை | ஆரம்ப திகதி: | முடிவுத் திகதி: |
|---|---|---|
| 1. மூன்று மாவட்டங்களை பிரதிநிதித்துவம் செய்யும் பரீட்சார்த்த சபைகள் மேல் மாகாணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டு, சபை குழு முறைமை தொடர்பான அடிப்படை விழிப்புணர்வு சபை உறுப்பினர்கள் மற்றும் குடிமக்களுக்கு வழங்கப்படும். சபை குழுக்களில் குடிமக்கள் பங்குபற்றலின் ஆற்றலில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் பிரதிபலிக்கும். | நவம்பர் 2018 | பெப்ரவரி 2019 |
| 2. பரீட்சார்த்த சபைகளில் குடிமக்கள் பிரதிநிதித்துவத்துடன் குழுக்கள் உருவாக்கப்படும். குழுக்களின் செயற்பாட்டிற்கான தொழிநுட்ப ஆதரவு மற்றும் திறன்கள், புற வசதியளிப்பவர்களின் உதவியுடன் வழங்கப்படும். | பெப்ரவரி 2019 | பெப்ரவரி 2020 |
| 3. சபை குழுக்களுடனான கலந்தாய்வில் ஆகக் கூடியது ஐந்து துணை சட்டங்கள் உருவாக்கப்படும். புற ஆலோசகர் ஒருவரினால் வசதியளிக்கப்பட்ட கலந்தாய்வு செயற்பாட்டின் ஊடாக அவசியமாகவுள்ள தேவைகளின் அடிப்படையில் துணைச்சட்டங்கள் அடையாளங் காணப்படும்.சட்ட அதிகாரிகள் மற்றும் மேல் மாகாண சபையின் ஆதரவுடன் இது உருவாக்கப்படும். | ஏப்ரல் 2019 | டிசம்பர் 2019 |
| 4. மேல் மாகாண சபையில் - மாகாண மட்டத்தில் 'பிரஜாமண்டல' வலுப்படுத்தலுக்கான நியதிச்சட்டம் உருவாக்கப்படும். | ஜனவரி 2019 | ஜூன் 2019 |
| 5. பிரதேச சபை, நகர சபை மற்றும் மாநகர சபைகளில் அனுபவத்தை வெளிப்படுத்துவதற்கு ஆதரவளிக்கும் வகையில் பொறியமைப்பு ஒன்று வழங்கப்படும். | ஜனவரி 2020 | மார்ச் 2020 |

| **தொடர்புத் தகவல்கள்** | | |
|---|---|---|
| நடைமுறைப்படுத்தல் நிறுவனத்தில் பொறுப்பில் உள்ள நபரின் பெயர்: | | Ms K S Subhadra Walpola |
| பதவி நிலை, திணைக்களம் | | Senior Assistant Secretary (Local Government), Ministry of Provincial Councils, Local Government & Sports |
| மின்னஞ்சல், தொலைபேசி | | email – saslg@pclg.gov.lk<br>TP – 011 2345971<br>Mobile – 071 4114735 |
| சம்பந்தப்பட்ட ஏனைய செயற்பாட்டாளர்கள் | சம்பந்தப்பட்ட அரச செயற்பாட்டாளர்கள் | *மேல் மாகாண சபை, உள்ளூராட்சி ஆணையாளர், மேல் மாகாணத்தின் தெரிவு செய்யப்பட்ட பிரதேச சபைகள* |
| | CSO, தனியார் துறை, பல்தரப்பு செயற்குழுக்கள் | *உள்ளூர் அரசாங்க அதிகாரிகளின் சம்மேளனம், சிவில் சமூக நிறுவனங்கள், சமுதாயம் சார் நிறுவனங்கள் மற்றும் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி பகுதிகளில் ஏனைய பங்குதாரர்கள்* |